CC 464/2021

03.02.2026

பு.சா.1,

பெயர்: தாமரைச்செல்வன்

த/பெ. தங்கவேல்

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எங்களது நிறுவனத்தின் GST மற்றும் PAN எண் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு மாதம் ரூ.30,000/- சம்பளம் வரும். மேற்படி பணத்தினை எனது வங்கிக் கணக்கிலும் நேரடியாகவும் தருவார்கள். எனது நிறுவனத்தின் சார்பாக எனக்கு அளித்த அடையாள அட்டையை நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு அடையாள அட்டை வழங்கவில்லை. எனக்கு PAN எண் உள்ளது.

நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள பு.சா.ஆ.6 ஆவணத்தில் உரிமையளார் மேகராஜ் என்பவருக்கு பவர் கொடுத்துள்ளார்கள். ஆனால் மேற்படி ஆவணத்தினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பு-சா.ஆ- 5 ல் மேகராஜ் என்பவர் கையெழுத்திட்டுள்ளார். எங்கள் நிறுவனம் பிரொப்பரைட்டர் நிறுவனம் என்றால் சரிதான். அதில் உரிமையாளர் கையொப்பமிடவில்லை என்றால் சரியல்ல. எனது உரிமையாளர் பவர் ஆவணம் கொடுத்துள்ளார் . அவர் தான்கையொப்பமிட்டுள்ளார். எனது நிறுவனம் உரிமையாளர் நிறுவனம் என்பதால் உரிமையாளர் தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும் அவருக்கு பதிலாக நான் அவருக்கு தெரியாமல் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எந்த ஆவணத்திலும் உரிமையாளர் கையொப்பமிடவில்லை என்றாலும் சரியல்ல. பவர் கொடுத்து அதன் மூலம் கையொப்பமிட்டுள்ளார். இவ்வழக்கின் எதிரி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. காப்புரிமைக்காக கொடுக்கப்பட்ட காசோலையில் தமிழில் தான் கையொப்பமிட்டுள்ளார். பு.சா.ஆ.6 ஆவணம் தமிழில் தான் தயாரிக்கப்பட்டுள்ளது.

10.08.2020 மற்றும் 23.06.2020 ம் தேதியிட்ட பு.சா.ஆ. 3 மற்றும் பு.சா.ஆ.7 ஆவணம் எந்த மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 06.07.2020 மற்றும் 16.07.2020 ம் தேதியிட்ட பு.சா.ஆ.8 ஆவணம் ஆங்கில மொழியில் அனுப்பப்பட்டுள்ளது. எங்களது நிறுவனத்தின் மூலம் 23.07.2020 ம் தேதியிட்ட பு.சா.ஆ.9 ஆவணம் எந்த மொழியில்

அனுப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எங்களது நிறுவனத்தின் வங்கிக் கணக்கு எண் எனக்கு ஞாபகம் இல்லை.

எங்களது நிறுவனத்தின் மேலாளர் என்ற முறையில் வங்கிக் கணக்குகளை நான் தான் பராமரித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எங்களது உரிமையாளர் தான் பராமரித்து வருகிறார். அவர் தற்போது ஆஸ்திரேலியாவில் உள்ளார். லோன் அக்கவுண்ட் நம்பர் எனக்கு ஞாபகம் இல்லை. ஒரே முறையில் வங்கி லோன் கணக்கில் இருந்து எதிரியின் கணக்கிற்கு பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

எந்தெந்த தேதியில் பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டது என்ற தேதி ஞாபகம் இல்லை. மொத்த பணம் ரூ. 25,68,000/- ஆகும். மேற்படி பணத்தினை எந்தெந்த தேதிகளில் செலுத்தினோம் என்று ஞாபகம் இல்லை. கடந்த 17.07.2019 ம் தேதி அன்று ரூ-13,98,500/- மட்டும் தான் எதிரியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் ல்லை. எதிரியின் வங்கிக் கணக்கில் இருந்து மேகராஜ் வங்கிக் கணக்கிற்கு 17.07.2019 ம் தேதி ரூ.1,00,000/- பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை.

புகார் மற்றும் பிராமாண வாக்குமூலத்தில் எதிரியின் விலைப்பட்டியலை வைத்து தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். கடந்த 17.07.2019 ம் தேதி எதிரியிடம் இருந்து காப்புரிமைக்காக மூன்று காசோலைகள் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 17.07.2019 ம் தேதியில் தான் எங்களது நிறுவனத்திற்கு வங்கியில் இருந்து லோன் வழங்கப்பட்டது என்றால் சரிதான். புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் 21.08.2020 ம் தேதி எதிரிக்கு கடிதம் அனுப்பியுள்ளாதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடிதத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

பு.சா.ஆ. 6 மற்றும் பு.சா.ஆ.9 ஆவணத்தில் நான்கு இயந்திரங்களை பெற்றுக் கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த ஆவணங்களில் நானும் மேகராஜ் என்பவரும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் எதிரி பல ஆண்டுகளாக எங்களது நிறுவனத்திற்கு இயந்திரங்கள் செய்து தந்திருக்கிறார் என்று சொன்னால் சரிதான். இயந்திரம் உற்பத்தி செய்வதற்காக காப்புரிமைக்காக காசோலைகளை எதிரி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

எதிரி எந்த பணமும் எங்களுக்கு தர தேவையில்லை என்றாலும், அவர் வாங்கிய பணத்திற்கு இயந்திரம் செய்து கொடுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல. லோன் கொடுத்த தொகையில் இருந்து மீதி தொகை அனைத்தையும் நிறுவனம் எடுத்துக் கொண்டது என்றால் சரியல்ல. மீதி தொகையை எதிரியின் வங்கி கணக்கில் செலுத்தியதால் அதனை எடுப்பதற்காக இந்த காசோலை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எனது உரிமையாளர் வெளிநாட்டில் இருப்பதால் நானும் மேகராஜ் என்பவரும் சேர்ந்து கையாடல் செய்துவிட்டு அதனை மறைப்பதற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கான ஆவணங்கள் அனைத்தும் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு ஆங்கில மொழி தெரியாது என்றாலும் அதனால் ஆங்கிலத்தில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

பு.சா.ஆ.-6 ஆவணத்தில் நாளது தேதியில் வேதிகா கோ கோ நிறுவனத்திற்கு 22,68,000/- கொடுக்க வேண்டியுள்ளது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற் கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி 16.02.2026 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**
Judicial Magistrate No. II,
Pollachi.